
மின்னிதழ்
# தேசியம்
THESIYAM තේසියම්
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 69 | 29.05.2023 (திங்கட்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 8 | ஊக்குவிப்பு : ரூ.30.00

## அரசு – தமிழர் தரப்பு பேச்சு கடந்த காலத்தைப்போல் குழம்பக்கூடாது: சந்திரிகா வேண்டுகோள்



கடந்த காலங்கள் போன்று அரசியல் தீர்வுக்கான பேச்சும் குழம்பிப் போகாமல் அதைத் தொடர வேண்டியது இரு தரப்பினரதும் பொறுப்பாகும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். மேலும், ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையில் ஆரம்பமாகியுள்ள அரசியல் தீர்வுக்கான

பக்கம் 5




# பொது நினைவுத் தூபியை ஏற்றுக் கொள்ள முடியாது:

## தமிழ்த் தலைமைகள் கூட்டாக அறிவிப்பு!

அரசாங்கம் முன்மொழிந்துள்ள அனைத்து நபர்களையும் நினைவு கூருவதற்கான பொது நினைவுத்தூபி அமைக்கும் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்த் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன், பொதுநினைவுத்தூபி என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை வெகுவாகப் பாதிக்கும் செயற்பாடு என்பதோடு போரை மேற்கொண்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களும் ஒரே இடத்தில் நினைவு கூர முனைவதானது முரண் நகையாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பக்கம் 5



பக்கம் 5

## பாக்குநீரிணையினை நீந்திக்கடந்து சாதனை படைத்தார்

### மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழன்!

# சரத்வீரசேகர தமிழ் மக்களை மிரட்டினால்

## அவருக்கு முன்னாள் போராளிகள் சார்பில் பதிலடி வழங்கப்படும் : துளசி தெரிவிப்பு !



இனவாதியான சரத்வீரசேகர அண்மைக்காலமாக தமிழ் மக்களை மிரட்டும் தொனியில் கருத்துகளை வெளியிடுவதாகவும் அவ்வாறு வெளியிடும் கருத்துக்களை இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் க.துளசி குறிப்பிட்டுள்ளார்.

பக்கம் 5



## புதுடில்லி பயணம் குறித்து எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை!

### நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின்போது புதுடில்லி விஜயம் குறித்துப் பேசியிருந்தாலும், அதுகுறித்து எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புதுடில்லிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும், தற்போது இந்தியாவுக்கு அரசியல் ரீதியான விஜயத்தை மேற்கொள்ளும்



பக்கம் 6



பக்கம் 5

## வழக்கை வாபஸ் பெறுங்கள்

### மிரட்டிய 7 ஆசிரியர்கள் மீது முறைப்பாடு..

யாழ் வலிகாம் மகாஜன பாடசாலையில் அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியரால் மூன்று மாணவர்கள் தாக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிசில் போடப்பட்ட முறைப்பாட்டை வாபஸ் பெறுமாறு மாணவனின் பெற்றோருக்கு அதே பாடசாலையைச்

தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM





# தையிட்டி விகாரைதான் கடைசியா?

தையிட்டி விகாரை திறக்கப்பட்டுவிட்டது. நிலத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் ஒரு தரப்பு இதுபோன்ற விடயங்களைச் செய்யமுடியும். அந்த விகாரை விவகாரத்தை நொதிக்கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான். அதேசமயம் அந்த விவகாரமானது தமிழரசியலின் இயலாமையை நிரூபிக்கும் ஆகப் பிந்திய எடுத்துக்காட்டுகளில் ஒன்று.

அந்த விகாரை ஒரு விவகாரமாக மாறிய பின் அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்திருந்தார். அதன்போது அஸ்திரிய பீடாதிபதி அவரிடம் கையளித்த எழுத்து மூல ஆவணம் ஒன்றின் மொழிபெயர்ப்பு தமிழில் ஊடகங்களில் வெளிவந்தது. அதி, அஸ்கிரிய பீடாதிபதி முக்கியமான சில விடயங்களை அழுத்திக் கேட்டிருக்கிறார். ”வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள விகாரைகள் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள வரலாற்று சிறப்புமிக்க வணக்கஸ்தலங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்” என்று அவர் கேட்டிருக்கிறார்.

அந்தச் சந்திப்பு நிகழ்வதற்கு கிட்டத்தட்ட பத்து நாட்களுக்கு முன் இம்மாதம் 11 ஆம் திகதி ஜனாதிபதி தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்தார். அதில் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளரும் அழைக்கப்பட்டிருந்தார். அச்சந்திப்பில் தொல்லியல் திணைக்களத் தலைவர், திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவிட மேலதிக நிதியை வெளித்தரப்புகளிடமிருந்து குறிப்பாக பௌத்த மத குருக்களிடமிருந்து பெறுவதாகக் கூறியிருக்கிறார். ஜனாதிபதி அதனை எதிர்த்துக் கேள்வி கேட்கின்றார். ஓர் அரச திணைக்களம் அவ்வாறு வெளியில் இருந்து நிதி உதவியைப் பெற முடியாது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அஸ்கிரிய பீடாதிபதி அவ்வாறு நிதி உதவி பெறுவதை அனுமதிக்குமாறு தனது கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

அதாவது சக்திமிக்க பௌத்த மத பீடங்களில் ஒன்று சிங்கள பௌத்த மயமாக்கலை ஊக்குவிக்கும் விதத்தில் ஜனாதிபதிக்கு எழுத்துமூல ஆவணம் ஒன்றை வழங்கியிருக்கிறது. அதேசமயம் உயர் மட்டத்தில் இல்லாத சில பௌத்த மதகுருக்கள் தையிட்டி விவகாரம் தொடர்பாக தமிழிலும் சிங்களத்திலும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இதில் நயினா தீவு விகாரதிபதியின் கருத்துக்கள் சிங்கள மக்களுக்கு சிங்களத்தில் சொல்லப்பட வேண்டியவை.

இலங்கைத்தீவில் மத நல்லிணக்கத்தை பொறுத்தவரை அது பெரும்பான்மையிடமிருந்துதான் தொடங்க வேண்டும். தென்னிலங்கையில் அது சிங்கள பௌத்தர்களிடமிருந்து தொடங்க வேண்டும். தமிழ்ப்பகுதிகளில் அது இந்துக்களிடமிருந்து தொடங்க வேண்டும். ஆனால், அதேசமயம் மேற்படி பௌத்த மதகுருக்களில் ஒருவரான பொகவந்தலாவை ராகுல தேரர் தமிழ் பௌத்தர்களைப் பற்றிக் கதைக்கின்றார். தையிட்டி திஸ்ஸ விகாரை தமிழ் பௌத்தர்களிடம் கையளிக்கப்படும் என்று கூறுகிறார். தமிழ் பௌத்தம் என்பது தமிழ் மக்களின் வரலாற்றில் ஒரு கட்டம். ஆனால் இப்பொழுது தமிழ் பௌத்தர்கள் யாழ்ப்பாணத்தில் எத்தனை பேர் உண்டு?

சாதாரண தமிழ் மக்களைப் பொறுத்தவரை பௌத்தம் என்பது ஆக்கிரமிப்பின் குறியீடாகவே பார்க்கப்படுகின்றது. தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் ஒரு காலகட்டத்தில் பௌத்தர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது ஒரு வரலாற்று உண்மை. இந்தியாவில் தோன்றிய பௌத்தம் ஆசியா முழுவதும் பரவிய பொழுது அது தமிழ் மக்கள் மத்தியிலும் பரவியது. தமிழின் காப்பிய காலம் எனப்படுவது சமண பௌத்த காலம்தான். தமிழில் உள்ள ஐந்து காப்பியங்களும் ஒன்றில் பௌத்த காப்பியங்கள் அல்லது சமண காப்பியங்கள்தான். பின்னர் நாயன்மார்களின் எழுச்சியோடு சைவம் பௌத்தத்தை வெற்றி கொண்டது. மதங்களுக்கிடையிலான பூசல்களும், அனல் வாதம் புனல் வாதம் போன்றவற்றில் பிற மதத்தவர்களை வென்றதும் தமிழ் வரலாற்றின் ஒரு பகுதி. அதுபோலவே தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்களாக மதம் மாறியதும் இஸ்லாமியர்களாக மதம் மாறியதும் தமிழ் வரலாற்றின் ஒரு பகுதி.

தமிழ் அடையாளம் ஒரு மதத்துக்கு மட்டும் உரியதல்ல என்று அறிஞர்கள் கூறுவர். பூர்வ காலங்களில் தமிழர்கள் இயற்கையை வழிபட்டார்கள். அதன்பின் சமணமும் பௌத்தமும் தமிழ்மக்கள் மத்தியில் பரவின. அதன்பின் பக்தி இலக்கியம். அதன் பின் கிறிஸ்தவம், இஸ்லாம். அதன்பின் ஈழத்தில் ஆயுதப் போராட்டமும் அதன் விளைவாக ஏற்பட்ட புலப்பெயர்ச்சியும். இப்படியாக பூர்வ காலங்களில் தொடங்கி இன்று வரையிலும் தமிழ் அடையாளத்தை வெவ்வேறு மதங்கள் செதுக்கியிருக்கின்றன. வெவ்வேறு கோட்பாடுகள் செதுக்கியிருக்கின்றன. வெவ்வேறு நம்பிக்கைகள் செதுக்கியிருக்கின்றன. ஈழப் போராட்டம் செதுக்கியது. புலப்பெயர்ச்சி செதுக்கியது. புலப்பெயர்ச்சி தமிழர்களை தாயகத்துக்கு வெளியே சிதறடித்துவிட்டது. அதனால், தமிழ் அடையாளம் எனப்படுவது சில அறிஞர்கள் சுட்டிக்காட்டுவதுபோல எல்லை கடந்த ஓர் அடையாளம். அது ஓர் அரசியல் எல்லைக்குள் குறுக்கப்பட முடியாத அனைத்துலக அடையாளம்.

> **அதிகாரமற்ற பிக்குக்கள் சொல்லும் கருத்துக்களை விடவும் அதிகாரம்மிக்க அஸ்கிரிய பீடாதிபதியின் கருத்துக்களே அரசியல் பரி மாணமுடையவை. அப்படிப் பார்த்தால் தாமரை மொட்டு கட்சியின் பிரதிநிதியாகக் காணப்படும் ரணில் விக்கிரமசிங்க, தொடர்ந்து சிங்கள பௌத்த மயமாக்கலை முன் னெடுக்கக்கூடிய வாய்ப்புக்களே தெரிகின்றன.**

குறிப்பாக கீழடி ஆய்வுகள் இந்திய வரலாற்றை தமிழில் இருந்து தொடங்கத் தேவையான சான்றுகளை வெளிக்கொண்டு வருவதாக அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள். எனவே தமிழர்கள் தமது மொழியின் தொன்மை மற்றும் அனைத்துலக இருப்பைக் குறித்துப் பெருமைப்பட வேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்தால், ஒரு காலம் தமிழில் பௌத்தம் நிலவியது என்பது வரலாற்று உண்மை.

ஆனால் பௌத்தம் ஒரு மதமாக இருக்கும் வரை பிரச்சனை இல்லை. அது ஒரு இனத்தின் ஆக்கிரமிப்புத் தத்துவமாக, ஆக்கிரமிப்பின் கருவியாக மாறும் பொழுதுதான் பிரச்சினையே வருகிறது. இலங்கைத்தீவின் இனப் பிரச்சினையே அதுதான். மதம்மொழிஇனம் நிலம் ஆகியவற்றை இணைத்து உருவாக்கப்பட்ட “தம்மதுவீப “ கோட்பாடு அதுவென்று மு. திருநாவுக்கரசு கூறுகிறார்.

சிங்கள பௌத்தம் ஓர் ஆக்கிரமிப்புக் கொள்கையாக மாறிய பின் அது தமிழ் பௌத்தத்தை கையில் எடுத்தால் அதுவும் ஓர் ஆக்கிரமிப்பு உத்தி என்றுதான் தமிழ்மக்கள் பார்ப்பார்கள். சிங்கள பௌத்தமானது ஏனைய மதங்களின் இருப்பை அங்கீகரிக்குமாக இருந்தால் குறிப்பாக யாப்பில் இப்பொழுது சிங்கள பௌத்தத்துக்கு வழங்கப்பட்டிருக்கும் முன்னுரிமையை நீக்கி இலங்கைத்தீவின் மதப்பல்வகைமையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்கச் சிங்கள அரசியல்வாதிகள் தயாரா? இங்கு பிரச்சனை மதப் பல்வகைமை அல்ல மத மேலாண்மைதான். சிங்கள பௌத்தம் ஒரு மத மேலாண்மைக் கோட்பாடு என்பதுதான்.

ஆதித் தமிழ் பௌத்தர்கள் பெருமளவுக்கு மகாயான பௌத்தத்தை சேர்ந்தவர்கள் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அதேசமயம் சிங்கள பௌத்தர்கள் தாங்கள் பின்பற்றுவது தேரவாத பௌத்தம் என்று கூறிக் கொள்கிறார்கள். ஆனால் தென்னிலங்கையில் பிரயோகத்தில் இருப்பது மகாயான பௌத்தந்தான் என்று பேராசிரியர் கணணாத் ஒபயசேகர கூறுகிறார். தேரவாத பௌத்தத்துக்கும் மகாயான பௌத்தத்துக்கும் இடையிலான முரண்பாடுகளின்போது இலங்கை வரலாற்றில் மன்னர்களின் காலத்தில் கொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. மகாயான பௌத்தம் அதிகம் இந்து மதப் பண்புகளை உள்வாங்கியது என்றும், இலங்கைத்தீவில் உள்ள மகாயான, தேரவாத பௌத்த பிரிவுகளுக்கு இடையிலான முரண்பாடுகளை இன ரீதியாகவும் வியாக்கியானம் செய்யலாம் என்றும் கூறும் அறிஞர்கள் உண்டு.

இவ்வாறான அரசியல், பொருளாதார, இராணுவ, மத கலாச்சாரப் பின்னணிக்குள் சில பௌத்த மத குருக்கள் தமிழ் பௌத்தத்தைப் பற்றிக் கதைப்பதனை தமிழ் மக்கள் சந்தேகத்தோடுதான் பார்ப்பார்கள். மேற்படி பிக்கு கூறுகிறார் கட்டப்பட்ட விகாரைகளை இடிக்க முடியாது என்று. ஒரு நிலத்தை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டு அதில் விகாரைகளைக் கட்டிவிட்டு அதன் பின் விகாரைகளை இடித்தால் அது மத நல்லிணக்கத்தை குழப்பி விடும் என்று கூறுவது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் ஒரு தர்க்கம்தான். தையிட்டியில் மட்டுமல்ல தமிழ் பகுதிகளில் இப்பொழுது தமிழ் பௌத்தர்கள் ஒரு சமூகமாக இல்லை. தமிழ்ப் பகுதிகளில் சிங்கள பௌத்தர்களான படைத்தரப்புத்தான் ஆயுதங்களோடு குந்தியிருக்கின்றது. தமிழ்மக்கள் அவர்களை ஆக்கிரமிப்பு படையாகத்தான் பார்க்கின்றார். ஒரு மதத்தின், ஒரு இனத்தின் மேலாண்மையை பாதுகாக்கும் ஒரு படையாகத்தான் பார்க்கின்றார்கள். இன, மதப் பல்வமையைப் பாதுகாக்கும் ஒரு படையாகப் பார்க்கவில்லை. எனவே இந்த நாடு இன மதப் பல்கைமையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்கட்டும். அப்பொழுது தமிழ் பௌத்தம் ஒரு பிரச்சினையே இல்லை.

இப்பொழுது மீண்டும் தையிட்டி விகாரைக்கு வருவோம். இந்த விடயத்தில் மேற்சொன்ன சில அதிகாரமற்ற பிக்குக்கள் சொல்லும் கருத்துக்களை விடவும் அதிகாரம்மிக்க அஸ்கிரிய பீடாதிபதியின் கருத்துக்களே அரசியல் பரிமாணமுடையவை. அப்படிப் பார்த்தால் தாமரை மொட்டு கட்சியின் பிரதிநிதியாகக் காணப்படும் ரணில் விக்கிரமசிங்க, தொடர்ந்து சிங்கள பௌத்த மயமாக்கலை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்புக்களே தெரிகின்றன.

அடுத்த ஆண்டு இறுதியில் அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும். அப்பொழுது எதிரணியின் ஒரு பொது வேட்பாளராக சம்பிக்க ரணவக்க நிறுத்தப்படலாம் என்ற ஊகங்கள் உண்டு. சம்பிக்க சிங்கள பௌத்தர்களைக் கவரக்கூடியவர். அதேசமயம் அரகலய போராட்டத்தின் பங்காளிகளிலும் ஒருவர். எனவே அவரை எதிர்கொள்வது என்றால் ரணில் விக்கிரமசிங்க சிங்கள பௌத்தர்களைக் கவரவேண்டும். அதோடு ஐ.எம்.எப்பின் நிபந்தனைகளை ஏற்பதால் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய எதிர்ப்பலைகளைத் திசை திருப்பவும் அது உதவும்.

அதாவது அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நோக்கித்தான் அவர் உழைக்கின்றார். சிங்கள பௌத்தத்தின் காவலனாக அவர் தன்னைக் காட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது. மேற்கத்தைய உடுப்புகளையணிந்து, மேற்கத்திய பாரம்பரியத்தைப் பின்பற்றும் ரணில், பாரம்பரிய உடையணிந்து சிங்களபௌத்த கடும் போக்காளர்களைப் பிரதிபலிக்கும் சம்பிக்க ரணவக்கையை எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம். அதற்கு ஒரே வழி சிங்கள பௌத்தர்களைத் திருப்திப்படுத்துவதுதான். அப்படிப்பார்த்தால் தையிட்டி விகாரை இறுதியானது அல்ல என்று எடுத்துக் கொள்ளலாமா?

நிலாந்தன்

# வடக்கு, கிழக்கில் பௌத்தர்கள் வாழ்ந்த அடையாளங்கள் பாதுகாக்கப்படும்! - அமைச்சர் அதிரடி அறிவிப்பு



வடக்கு, கிழக்கில் உள்ள தொல்பொருள் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத நிர்மாணங்கள் தொடர்பில் முழுமையான அறிக்கை கிடைத்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படுமென புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மீண்டும் தெரிவிக்கின்றார்.

வடக்கு, கிழக்கில் பௌத்த அடையாளங்கள் நிறுவப்படுதல் மற்றும் தனியார் காணிகளில் பௌத்த விகாரைகள் நிறுவப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பாக எழுப்பபட்ட கேள்விக்கு இவ்வாறு பதில் வழங்கியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் போர் நிலைமைகள் நீடித்தமையால் தொல்பொருள் பகுதிகள் முழுமையாக அடையாளம் காணப்படவில்லை.

தொல்பொருள் என்பது நாட்டின் மரபுரிமைகள் சார்ந்த விடயமாகும். அதற்கும் இன அடையாளங்களுக்கும் தொடர்பில்லை.

இந்நிலையில் நாம், வடக்கு, கிழக்கில் காணப்படுகின்ற தொல்பொருளியல் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட அனைத்து அடையாளங்களும் சட்டத்திற்கு முரணானவையாகும்.

ஆகவே அவை தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றைக் கோரியுள்ளேன் அந்த அறிக்கை கிடைத்ததும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

குருந்தூர்மலை, வெடுக்குநாறி தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. அந்த வழக்குகளின் தீர்ப்புக்கள் வந்தபின்னரே இறுதியான தீர்மானத்தினை எடுக்க முடியும்.

கிளிநொச்சி உருத்திரபுரம் கந்தசுவாமி கோவில், திருக்கோணேஸ்வரம் உள்ளிட்ட பகுதிகளில் தொல்பொருளியல் அடையாளங்கள் காணப்படுவதாக எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சில இடங்களில் தொல்பொருளியல் பகுதிகளில் கோவில்கள் உள்ளிட்ட நிர்மாணங்கள் செய்யப்பட்டுள்ளன.

அவை தொடர்பிலும் கரிசனை கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன், வடக்கு, கிழக்கில் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள்.

அவர்களின் அடையாளங்களும் காணப்படுகின்றன. ஆகவே அந்த வரலாற்று தகவல்களையும் பாதுகாக்க வேண்டியது கடமையாகின்றது. அதுபற்றி யாரும் அச்சமடைய வேண்டியதில்லை.

# விசாரணைகளின்றி இனப்படுகொலை என்று எப்படிச் சொல்லலாம்?

## கனேடியப் பிரதமரின் கருத்துக்கு சந்திரிகா பதிலடி!



"கனேடியப் பிரதமர் இலங்கையில் தமிழ் இனப்படுகொலை நடந்தது என்று கூறும் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். விசாரணைகள் எதுவுமின்றி இப்படியான சொல்லை கனேடியப் பிரதமர் பயன்படுத்தியது கண்டனத்துக்குரியது." - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

"மே 18ஐ, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை நாடாளுமன்றம் கடந்த ஆண்டில் ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த மோதலில் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப் பிழைத்தோரதும் உரிமைகளுக்காகவும், இலங்கையில் தொடர்ந்தும் நெருக்கடியை எதிர்கொள்வோருக்காகவும் குரல் கொடுப்பதைக் கனடா நிறுத்தமாட்டாது" என்று அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலையொட்டி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டில் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நீதியான விசாரணை எதுவும் இதுவரை நடைபெறவில்லை. அதனால் தான் பாதிக்கப்பட்ட தரப்பினர் சர்வதேசத்திடம் நீதிவேண்டி நிற்கின்றார்கள். இந்த நிலையில் தான் வெளிநாடுகளின் தலைவர்களும் சர்வதேசப் பிரதிநிதிகளும் இலங்கை அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதுடன் நாட்டை அவமானப்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். ஒரு நீதியான உள்நாட்டு விசாரணை நடத்திருந்தால் வெளியில் இருப்போர் நாட்டையும், அரசையும் இவ்வாறு தூற்றி இருக்கமாட்டார்கள்.

எனினும் கனேடியப் பிரதமர் இலங்கையில் தமிழ் இனப்படுகொலை நடந்தது என்று கூறும் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். விசாரணைகள் எதுவுமின்றி இப்படியான சொல்லை கனேடியப் பிரதமர் பயன்படுத்தியது கண்டனத்துக்குரியது." - என்றார்.




# சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும்.



சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு கலாபீடத்தின் ஆளுநர் சபை உறுப்பினரும், கல்விப் பிரிவு தலைவரின் தலைமையில் கமுஃ கமுஃ அல்- ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

குர்ஆன் மனனமிடும் இஸ்லாமிய பல்கலைக் கழகமான தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் பரீட்சைகளில் திறமை சித்தி பெற்ற மாணவர்கள், சிறந்த வரவை பேணிய மாணவர்கள் உட்பட பல்வேறு துறைகளில் சாதித்த மாணவர்கள் மற்றும் இவ்வாண்டுக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இருதய நோய் விசேட வைத்திய நிபுணர் அல்ஹாபிழ் டாக்டர் எம்.ஏ. நௌசாத் அலி கலந்து கொண்டு மாணவர்களை கௌரவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.கே. சனூஸ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் என்.எம்.றிஸ்மீர் ஆகியோர் கலந்துகொண்டார். நிகழ்வின் விசேட உரையை சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் தவிசாளர் சட்டத்தரணி மௌலவி என்.எம்.ஏ. முஜீப் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் உலமாக்கள், பாடசாலை அதிபர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீடத்தின் நிர்வாகிகள், ஆளுநர் சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

**அன்பான வாசகர்களுக்கு..!**

உலகத் தமிழர்களின் கைகளில்
தவழும் மின்னிதழ் மற்றும்
அச்சு வடிவிலும் தினசரி மற்றும்
வார வெளியீடாக வெளிவரும்
தேசியம் பத்திரிகைக்கு
தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும்
ஆக்கபூர்வமான கட்டுரைகள்,
கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள்,
செய்திகள் போன்றவற்றை எமக்கு
அனுப்பி தேசியம் பத்திரிகையை
வலுவடையச் செய்யுங்கள்.

*No. 27, Kannathiddy Road, Jaffna.*
*Tel : 021 222 7557*
*E-mail : thesiyamnews@gmail.com*
*Whatsapp : +94 76 567 3339*

**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**

SCAN ME

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**
**021 222 7557 / +94 76 567 3339**

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

## இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவ 06 ம் கட்ட இறுதி ஒருநாள் பயிற்சி பட்டறை..!






மனித மேம்பாட்டு அமைப்பினால் இளைஞர், யுவதிகள், அமைப்பின் அங்கத்தவர்களுக்கான 6 கட்டங்களாக நடைபெற்ற தலைமைத்துவப் பயிற்சி பட்டறையின் இறுதிக் கட்டம் தன்னம்பிக்கை உள்ள எதிர்கால இளைஞர் யுவதிகளை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளைக் அடிப்படையாக கொண்டு (27) சனிக்கிழமை வாழைச்சேனை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.


மனித மேம்பாட்டு அமைப்பின் தலைவர் எஸ்.ஏ.முகம்மட் அஸ்லத்தின் வழிகாட்டலிலும், அமைப்பின் சாய்ந்தமருது அமைப்பாளர் ஆர். அல்முன்தஸீரின் ஒருங்கிணைப்பிலும், அமைப்பின் வாழைச்சேனை பிரதேச அமைப்பாளரான இஸட். எப். ஸிஹானி, ஓட்டமாவடி பிரதேச ஒருங்கிணைப்பாளரான இஸட்.எப். ஸிமானி ஆகியோர்களின் ஏற்பாட்டிலும் தேசிய இளைஞர் படையணி வாழைச்சேனை பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரியான லெப்டினன் கேர்ணல் எம்.எச்.எம். ரவூப் அவர்களின் தலைமையிலும் இளைஞர் - யுவதிகளுக்கான விரிவுரைகளும், பயிற்சிகளும், கள செயற்பாடுகளும் இதன்போது நடாத்தப்பட்டது.

இப் பயிற்சி பட்டறையில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் - யுவதிகள் கலந்து கொண்டதுடன் அன்று மாலை லெப்டினன் கேர்ணல் எம்.எச்.எம்.ரவூப் அவர்களினால் கலந்து கொண்ட இளைஞர் - யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

## மட். கன்னங்குடா பாலம் இடிந்து விழும் நிலை இரண்டு அமைச்சர்களும் ஏமாற்றி விட்டார்கள்

### பாலத்தை புனரமைத்து தருமாறு கோரி ஆர்ப்பாட்டம்





மட்டக்களப்பில் அபிவிருத்தி என்ற போர் கொடியை தூக்கியிருக்கும் இரண்டு அமைச்சர்களும் ஏமாற்றி விட்டாதாகவும் இடிந்து விழும் நிலையிலுள்ள வவுணதீவு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள கன்னங்குடா பாலத்தையும் அந்த பகுதி வீதியையும் புரனமைத்து தருமாறு கோரி பிரதேச மக்கள் நேற்று ஞாயிற்றுக் கிழமை (28) அந்த பாலத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்ததையடுத்து அந்த பாலத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் நேற்று காலை 10 மணிக்கு சுட்டெரிக்கும் வெய்யிலில் ஒன்றிணைந்தனர்.

இதனையடுத்து வாக்குகளை பெற்று மக்களை ஏமாற்றாதே, கன்னங்குடா மக்கள் மக்கள் இல்லையா?, தேர்தல் காலத்தில் மக்களிடம் வாக்குறுதி பின்னர் மக்களும் இல்லை வாக்குறுதி கொடுத்தவர்களும் இல்லை,

கடந்த 1978 ம் ஆண்டு போடப்பட்ட இந்த பாலம் தற்போது இடிந்துவிழும் நிலையில் உள்ளது இதன் ஊடாக மக்கள் நாளாந்தம் அச்சத்தின் மத்தியில் பிரயாணிப்பதாதாகவும் இந்த பாலத்தின் ஊடாக கன்னங்குடா, மண்டபத்தடி, கரையாக்கம்தீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருவதாகவும்.

இந்த பாலத்தின் இருந்து கறிஞ்சாமுனை வரையிலான 900 ஆயிரம் மீற்றர் கொண்ட வீதி ஊடாக தினமும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பிரயாணித்து வருகின்றனர் இந்த வீதி குண்டும் குழியுமாக இருப்பதால் பல்வேறு அசௌகரியங்கள் மத்தியில் பிரயாணித்து வருவதுடன் வீதியின் குழியில் வீழ்ந்து தினமும் காயமடைந்து வருகின்றனர்.

இதேலேளை குறித்த பாலமும் உடைந்து வீழ்ந்து விடும் அபாயகரமான நிலையிலுள்ளது இது தொடர்பாக தேர்தல் காலங்களில் அரசியல் வாதிகள் வாக்கு கேட்டுவரும் போது வாக்குறிதிகளை வழங்கிவிட்டு வாக்குகளை பெற்ற பின்னர் இங்கு வருவதில்லை அதேவேளை 2020 அபிவிருத்தி குழு இணைத்தவைராக இருந்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனிடம் சென்றேர் இந்த உடனடியாக புனரமைப்பாக தெரிவித்தார் பின்னர் அவர் பதவி போனதும் அதன் பின்னர் வந்த தற்கோதைய அபிவிருத்தி குழு தலைவர் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சி.சந்திரகாந்தன் சென்ற போது மிக விரைவில் இதனை புனரமைத்து தருவாக

ஆனால் கடந்த 2020 எங்கள் மக்களிடம் போலி வாக்குறிதிகளை வழங்கி வாக்குகளை அபகித்தவர்கள் அபிவிருத்தியையம் செய்யவில்லை எங்கள் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதுடன் சுபபோக வாழ்க்கை வாழுகின்றனர்.

900 ஆயிரம் மீற்றர் வீதியை ஒரு அமைச்சர் செய்ய முடியாது என்றால் எங்களுக்கு அவமானம் மட்டக்களப்பில் இப்படி ஒரு அமைச்சர் இருந்து இந்த சிறியதை கூட செய்யமுடியாதவர்கள் எதிர்காலத்தில் எப்படி எங்கள் வாக்குகளை கேட்கப்போகின்றீர்கள் என எங்களுக்கு அவமானமாக உள்ளது

எனவே உடனடியாக இந்த பாலத்தையும் வீதியையும் புனரமைத்து தருமாறு அரசாங்கத்திடம் கோரி சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பி ஆர்பாட்டத்தில் சுமார் ஒருமணித்தியாலம் ஈடுபட்டட பின்னர் அங்கிருந்து விலகி சென்றனர்.

## இறக்காமம் றோயல் கனிஷ்ட கல்லூரியின் மகத்துவம் 2 எனும் புலமையாளர் கௌரவிப்பு மாண்புறு விழா

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கௌரவ அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.அப்துல் மஜீட் கோட்டக் கல்விப் பணிப்பாளர் யுஎல். மகுமூட்லெவ்வை அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி விரிவுரையாளர் ஏ.நளிம் மற்றும் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் கலந்து சிறப்பித்தனர்.

இறக்காமம் கோட்டத்தில் அதிகூடிய 158 புள்ளிகளை பெற்ற ஏஎம். பாத்திமா நுஸைபா உள்ளிட்ட சித்தி பெற்ற 23 மாணவருக்கும் பதக்கமும் கேடயமும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பெற்றார் சார்பில் ஆசிரிய ஆலோசகர் எஸ்எல்ஏ. முனாவ் அதிதிகள் மற்றும் அதிபருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.




## யாழ். நாகபூசணி சிலை காவலரணை தாக்கிய நபர் கைது!

யாழ். பண்ணை நாகபூசணி அம்மன் சிலைக்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் சோதனை சாவடி மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்ணை பகுதியில் பொலிஸாரின் காவலரன் உள்ள கூடாரத்தின் கண்ணாடிகள் மீது சனிக்கிழமை இரவு (27-05-2023) இனம் தெரியாத நபரொருவர் கல் வீச்சு தாக்குதல் மேற்கொண்டு, கண்ணாடிகளை உடைத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், தான் மது போதையிலையே கல் வீசினேன் என தெரிவித்துள்ளார்.

அந்நபரை பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.




## பொது நினைவுத் தூபியை...

இலங்கையில் ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மைகள் அல்லது குடியியல் குழப்பங்களின் விளைவாக உயிரிழந்த பொது மக்கள், முப்படையினர் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட அனைத்து நபர்களையும் நினைவு கூறுவதற்கான நினைவகத்தை நல்லிணக்கம் மற்றும் மீளிணைப்பின் அடையாளமாக கொழும்பு நகரில் பொருத்தமான இடமொன்றில் நிர்மாணிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்நிலையில் கருத்து வெளியிடும்போதே தமிழ்த் தலைவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

**சம்பந்தன்**

இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிக்கையில், முதலில் தென்னிலங்கைத் தலைவர்கள் இனங்களுக்கு இடையிலான பிரச்சினைகளைத் தீர்த்திருப்பார்களாயின் இவ்விதமான மரணங்கள் ஏற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆகவே மோசமான முறையில் நடத்தப்பட்ட போரினால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பில் தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டியது கட்டாயமானதாகின்றது.

அனைத்து மரணங்களையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது. படையில் உள்ள இராணுவ வீரர் போரில் மரணிப்பதற்கும், தாய் ஒருவர் படையினரிடத்தில் தனது மகனை ஒப்படைத்து விட்டதன் பின்னர் மரணிப்பதும், வலிந்து காணாமலாக்கப்படுவதும் முற்றிலும் மாறுபட்ட விடயங்களாகும்.

போரின் இறுதியில் படையினரின் அறிவிப்புக்கு அமைவாக இளைஞர் யுவதிகள் சரணடைந்துள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை.

அதேநேரம் இந்த விடயத்தில் மரணங்கள் பொதுவானது என்று கூறினாலும், தமிழ் மக்கள் முகங்கொடுத்துள்ள மரணங்களும், இழப்புக்களும் அதிகமானவை. அவர்கள் மிகவும் அனுதாப நிலைமையில் உள்ளார்கள்.

ஆகவே, அவ்விதமான பாரிய இழப்புக்களைச் சந்தித்த மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தி நினைவேந்தலைச் செய்வதற்குரிய சுதந்திரம் காணப்பட வேண்டும். அதனை கட்டுப்படுத்த முடியாது.

நினைவேந்தலைச் செய்வதற்கு ஒவ்வொருவருக்கும் அடிப்படை உரிமை உள்ளது. அது மதிக்கப்பட வேண்டும். அவர்கள் தாம் விரும்புகின்ற பகுதியில் ஒன்று கூடி நினைவேந்தலைச் செய்வதற்கு முழுமையான உரித்துடையவர்கள்.

ஆகவே அதனைத் தடுத்து நிறுத்தி பொதுத்தூபி அமைப்பதானது சட்டத்தின் பிரகாரம் தவறானது. அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை மேலும் பாதிப்படையச் செய்யும் செயற்பாடாகவே கருதுகின்றோம்.

அந்த வகையில் பொதுத்தூபி அமைக்கப்படுவதையும், அங்கு தான் தமிழ் மக்கள் நினைவேந்தலைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த முனைவதையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றார்.

**சி.வி.விக்னேஸ்வரன்**

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில், என்னைப்பொறுத்தவரையில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகவே பார்க்கின்றேன். இத்தனை ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்மறையாகச் சிந்தித்தவர்கள் தற்போது மாறுபட்டுச் சிந்திக்கின்றார்கள். இந்தச் சிந்தனையானது இதயசுத்தியுனானதாக இருக்க வேண்டும். என்றார்.

**கஜேந்திரகுமார்**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில்,

பொதுநினைவுத்தூபியை அமைத்து அரசாங்கம் சர்வதேசத்திற்கு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட்டோம் என்று காண்பிப்பதற்கே முனைகின்றது.

அதேநேரம், இனப்படுகொலை புரிந்த படையினருக்கும், விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் இனத்திலிருந்து மடிந்தவர்களுக்கும் ஒரே இடத்தில் நினைவேந்தலைச் செய்ய முடியாது. அது இயற்கைக்கும் முரணானது.

ஏற்கனவே, தமிழ் மக்களை இனப்படுகொலை செய்து அதற்கு பொறுப்புக்கூறலில் இருந்து விலகியிருக்கும் அரசாங்கம் தற்போது தமிழர் தாயகத்தினை ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி நிலைமாறுகால நீதிப்பொறிமுறையை மக்களின் விருப்பத்திற்கு மாறாக அமுலாக்க முனைவதாக அறிவித்த போதும் அதனைக் கூட நடைமுறைப்படுத்தாது காலத்தினை இழுத்தடித்து வருகின்றது.

தற்போது இழப்பீட்டு பணியகம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆகியவற்றை நிறுவி சர்வதேசத்தினை ஏமாற்றுவதற்கு முனைகின்றது. அதன் தொடர்ச்சியாகவே நினைவுத்தூபி விடயத்தினை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றது. ஈற்றில் தமிழ் மக்களை அடக்குமுறையால் ஒற்றையாட்சிக்குள் நிரவகிப்பதற்கு முனைகின்றது.

ஆகவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது மக்களுக்கான நினைவுத்தூபி கொழும்பில் அமைய முடியாது. அதுவொரு பொதுத்தூபியாக இருக்க முடியாது.

அதற்கு நாம் ஒருபோதும் இணங்கப்போவதில்லை. எமது மக்களுக்கான நினைவேந்தல் தூபியானது முள்ளிவாய்க்காலில் தான் நிறுவப்பட வேண்டும் என்றார்.

**சித்தார்த்தன்**

புளொட் அமைப்பின் தலைவரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன் தெரிவிக்கையில்,

படையினரையும், அவர்களால் கொல்லப்பட்ட பொதுமக்களையும் ஒரே இடத்தில் நினைவு கூருவதற்கு முயல்வதானது கேலிக்கூத்தான செயற்பாடாகும். இந்த முயற்சியானது, உள்நோக்கம் கொண்டது என்பதோடு பாதிக்கப்பட்ட மக்களை மேலும் நோகச் செய்யும் செயற்பாடாகும்.

இந்த செயற்பாட்டால் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று கருதுவதானது வேடிக்கையானது. குறித்த செயற்பாடானது இனங்களுக்கு இடையிலான துருவப்படுத்தலை மேலும் வலுப்படுத்தி முறுகலையே தோற்றுவிக்கச் செய்யும் முயற்சியாகும்.

ஆகவே இவ்விதமான ஏற்றுக்கொள்ள முடியாத செயற்பாடுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம் என்றார்.

**செல்வம் அடைக்கலநாதன்**

ரெலோ அமைப்பின் தலைவரும், வன்னி. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில், அரசாங்கம் பொதுநினைவுத்தூபியை அமைப்பதன் ஊடாக பொதுமக்கள் தமது உறவுகளுக்காக தத்தமது பிரதேசங்களில் நினைவுகூரல் செயற்பாடுகளை முன்னெடுப்பதை தடுத்து நிறுத்துவதை பின்னணியில் கொண்ட கபடத்தனமான செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட எமது மக்கள் கொழும்பு வரை பயணித்து தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்பதும், தமது இழப்புக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய படையினருக்கும் அதே இடத்திலேயே நினைவு கூரலைச் செய்ய வேண்டும் என்பதும் வெந்தபுண்ணில் வேலைப்பாய்ச்சும் செயற்பாடாகும். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

ஈ.பி.ஆர்.எல்.எப். இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில், அடக்குமுறைக்கு உள்ளாகிய இனமொன்று அடக்குமுறையிலிருந்து விடுதலையை அடைவதற்காக போராடியது. அந்தப்போராட்டத்தில் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்துள்ளது.

அவ்விதமான தமிழினம், எவ்வாறு அடக்குமுறையை மிகமோசமான உரிமை மீறல்களைச் செய்வர்களுடன் இணைந்து தமது உறவுகளை நினைவு கூர முடியும்.

அதுமட்டமல்ல, தமிழினம் என்ன காரணங்களுக்காக விடுதலை கோரி போராடியதோ அந்தக் காரணங்கள் இன்னமும் முடிவுக்கு கொண்டுவரவில்லை. அவை நாளுக்கு நாள் தீவிரமடைகின்றன.

## அரசு - தமிழர் தரப்பு பேச்சு...

பேச்சை வரவேற்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசியல் தீர்வு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதிக்கும் வடக்கு - கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அண்மையில் சந்திப்பு இடம்பெற்றிருந்தது. தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணாமல் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லாது என்பதை நான் அன்று தொடக்கம் இன்று வரை எடுத்துரைத்து வருகின்றேன்.

எனது ஆட்சியில் அரசியல் தீர்வுக்காக என்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறேன். அந்த முயற்சி ஏன் பலனளிக்கவில்லை என்பதும், அதைக் குழப்பியடித்த தரப்பினர்கள் யார், யார் என்றதையும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என தெரிவித்துள்ளார்.

## பாக்குநீரிணையினை நீந்திக்...

நேற்றைய தினம் பாக்குநீரிணையினை நீந்தி கடந்து மட்டக்களப்பு மண்ணிற்கு மட்டுமல்ல ஈழத்தமிழருக்கும் பெருமைசேர்த்தார் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரான மதுஷிகன்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரான மதுஷிகன் இச் சாதனையினை புனித மிக்கேல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவில் நிகழ்த்தியிருப்பது சிறப்பம்சமாகும்.

20 வயதுடைய, அதிபர் சாரணர் விருது பெற்ற மதுஷிகன் இந்தியாவின் தனுஷ் கோடியில் இருந்து தலைமன்னார் வரையான 30 கிலோ மீற்றர் தூரத்தை இன்று அதிகாலை நீந்தத் தொடங்கி நேற்று பிற்பகல் 2 மணியளவில் நாட்டின் தலைமன்னாரை வந்தடைந்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க வேண்டும் என்பது நீச்சல் வீரர்கள் பலரினதும் அபிலாஷையாக இருந்து வருகின்றது.

ஆனால் இதை நீந்திக் கடக்கின்றமை என்பது மிகப் பெரிய சவால் ஆகும். ஏனெனில் இந்நீரிணை பூராவும் கடல் பாம்புகள், ஆபத்தான கடல் வாழ் உயிரினங்கள் உள்ளன.

இதையும் தாண்டி மட்டக்களப்பை சேர்ந்த இந்த மாணவன் சாதித்திருப்பது பெரிய விடயமே காரணம் இத் தூரத்தை நீந்திக்கடக்க முயன்ற பலர் தோல்வியை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சரத்வீரசேகர தமிழ் மக்களை...

இலங்கையில் இனப்படுகொலை செய்த படையினரை நினைவுகூரும் நினைவு தூபியில் தமிழர்களையும் நினைவு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அதனை வன்மையாக கண்டிப்பதாக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி தெரிவித்துள்ளார்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று யாழில் உள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்றிருந்த நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அனைத்து இனத்தவர்களும் நினைவு கூருவதற்கான பொதுவான நினைவுத்தூபி அமைக்கும் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் பொதுநினைவுத்தூபி என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை வெகுவாகப் பாதிக்கும் செயற்பாடு என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் இனவாதியான சரத்வீரசேகர அண்மைக்காலமாக தமிழ் மக்களை மிரட்டும் தொனியில் கருத்துகளை வெளியிடுவதாகவும் அவ்வாறு வெளியிடும் கருத்துக்களை இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் க.துளசி குறிப்பிட்டுள்ளார்.

## வழக்கை வாபஸ் பெறுங்கள்...

சேர்ந்த ஆசிரியர்களால் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருவதாக முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவது குறித்த பாடசாலையில் கேள்வி கேட்கும் மாணவர்கள் மூவரை அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் மூர்க்கத்தனமாக தாக்கியதில் இரு மானவர்கள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதில் ஒரு மாணவனின் மூளை நரம்பில் பாதிப்பு ஏற்பட்டுள்ள காரணத்தினால் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான நிலையில் குறித்த பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஏழு பேர் குறித்த வழக்கை வாபஸ் பெறுமாறு தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருவதுடன் பணம் வழங்குவதாகவும் பெற்றோருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது.

குறித்த விடையம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் பிராந்தி அலுவலகமும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியவற்றிற்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளது.

தேசியம் பத்திரிகையில்
கதைகள் பேசும் பக்கத்திற்கு
சிறந்த புகைப்படங்கள்
பிரசுரிக்கப்படுகிறது...
நீங்கள் எடுத்த சிறந்த படங்களை
எங்களுக்கு வாட்ஸ் ஆப் மூலம்
பெயருடன் அனுப்பி வையுங்கள்..
+94 76 567 3339

தேசியம் www.thesiyamnews.com THESIYAM

## புதுடில்லி பயணம் குறித்து எவ்...

உத்தேசம் இல்லை என்றும் தமிழரசுக்கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணியின் பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப்பகிர்வு குறித்த பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இதனைத்தொடர்ந்து அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயத்தில் கூட்டமைப்பு மீண்டும் இந்தியாவின் ஆதரவை நாடுமா என்ற கேள்விகள் முன்வைக்கப்பட்டுவந்த பின்னணியிலேயே கூட்டமைப்பின் பிரதிநிதிகள் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொள்ள விருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதனை முற்றாக மறுத்துள்ள தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாக இரா.சம்பந்தன், தற்போது இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் உத்தேசம் எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.
அதனை மீளுறுதிப்படுத்தியுள்ள கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இந்திய விஜயம் குறித்த திட்டம் எதுவுமில்லை எனக் கூறியுள்ளார்.

இதனை ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனும் மறுத்துள்ளார்.

இது குறித்து புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறியுள்ளதாவது, இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு புதடில்லியில் இருந்து உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை. இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் குறித்த திட்டம் எதுவும் இல்லை அத்தோடு ஏற்கனவே புதுடில்லிக்கு விஜயம் மேற் கொள்ளுமாறு பிளவுபட முன்னரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்புவிடுத்திருந்த போதிலும், அதற்குக் கட்சியின் தலைவர் சம்பந்தன் “வரவில்லை“ எனக்கூறிவிட்டார். தற்போது இவ்விடயத்தில் இந்தியா பெருமளவுக்கு அக்கறை காண்பிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின்போது புதுடில்லி விஜயம் குறித்துப் பேசியிருந்தாலும், அதுகுறித்து எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.








# நெடுங்கேணி, மாமடு “விருட்சம்” கிராமிய நூலகத்தின் ஒருவருட பூர்த்தி

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள நெடுங்கேணி, மாமடு கிராமசேவகர் பிரிவில் அமைந்த சேனைப்பிலவுக் கிராமத்தில் மக்களதும் மாணவர்களதும் நலன்சார்ந்து வாசிப்பை பழக்கப்படுத்தவும் நூலக பயன்பாட்டை அதிகரிக்கவும் நோக்காகக் கொண்டு கடந்த வருட இறுதியில் நூலக உருவாக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ஒருவருடம் பூர்த்தியாகிய நிலையில் தொடர்ந்தும் அதன்செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
‘சமூகத்தில் இல்லாதவற்றை செய்ய விளைவது அபிவிருத்தி அல்ல, சமூகத்தின் தேவையை கண்டறிந்து அதனை செய்வதே ஒரு பயனுள்ள அபிவிருத்தி’
வாசிப்பு ஏன் முக்கியம் என்ற கேள்வி உங்களில் பலருக்கும் எழலாம். ஏன் நாங்கள் வாசிப்பது இல்லையா என்று கூட நீங்கள் கேள்வி எழுப்பலாம். ஆம் தினமும் திறன்பேசிக்குள் மூழ்கித் திழைக்கும் நாம் அதனூடாக பல விடயங்களை அறிகின்றோம். ஆனால் புத்தகங்களை நேரம் ஒதுக்கி எத்தனைபேர் வாசிக்கிறோம் என்றால் அது கேள்விக் குறிதான். ஒருவர் புத்தகத்தைத் தொட்டுணர்ந்து அதை வாசித்துப் பயனடைவது போன்று வேறு எவ் வழியில் வாசிப்பதாலும் திருப்திபெற முடியாது. காரணம் நூல் தலைசிறந்த நண்பன் என்பார்கள் சிறந்த நண்பன் ஒருவன் எமக்கு அருகில் இருந்து எம்மை சரியாக வழிநடத்துவது போன்ற உணர்வை ஒரு நல்ல புத்தகத்தால் தர முடிகின்றது. இன்றைய தலைமுறையினருக்கு வாசிப்புப் பழக்கம் வெகுவாகக் குறைந்துவிட்டது என்றே கூற வேண்டும். வெறுமனே கல்வி கற்பதனால் கல்வியாளன் ஆகிவிடமுடியாது. பரந்த அறிவிற்கும் சிந்தனைத்திறனிற்கும் ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்கவும் வாசிப்பு மிக முக்கியமாகின்றது. ‘Readers are Leaders’ என்பார்கள். நூல்கள் எவ்வளவிற்கு வாசிக்கின்றோமோ அவ்வளவிற்கு சொல்லாற்றலும் எழுத்து ஆளுமையும் அதிகரிக்கும்.
இவ்வாறு சமூகத்தில் வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கவும் அதை கல்வியோடு இணைந்த நடைமுறையாக்கவும் எடுக்கப்பட்ட முயற்சியில் ஒன்றுதான் விருட்சம் நூலக உருவாக்கம். நெடுங்கேணி, மாமடு கிராம சேவகர் பிரிவு 5 கிராமங்களை உள்ளடக்கிய 250க்கு மேற்பட்ட குடும்பங்களைத் தன்னகத்தே கொண்ட பகுதியாகும். இப்பகுதியில் வசிக்கும் 200க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கும் நூல் ஆர்வலர்களுக்கும் நூலகம் இல்லாமை ஒரு பெரும் குறையாகவே காணப்பட்டுவந்தது. அச் சமூகத்திலிருந்து கல்வி கற்கும் ஒருவராக நூலகம் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்த எனக்கு எமக்கான நூலகம் ஒன்றை உருவாக்கும் வாய்ப்புக் கிடைத்தது.
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையானது மாணவர்களை வெறுமனே கற்பித்தல் என்பதையும் தாண்டி அனுபவ ரீதியிலும் செயற்பாட்டு ரீதியிலும் பூரண திறன்மிக்க மாணவர்களாக உருவாக்க பயிற்றுவிக்கும் ஒரு துறையாகும். அந்தவகையில் பாடவிதானத்திற்குட்பட்ட அபிவிருத்தி தொடர்பாடல் எனும் பாடப்பரப்பு எம்மை சமூகத்தில் அக்கறைமிக்கவர்களாக செயற்பட வித்திட்டது. அபிவிருத்தி என்பது யாது, சமூகத்திற்கு எவ்வாறான அபிவிருத்தி பொருத்தமானது என கண்டறிந்து அதை வெறுமனே வாய்ப் பேச்சாக நிறுத்திவிடாது அதனைச் செயற்படுத்திக் காட்டுவதற்கு எம்மோடு பலமாக துறைத்தலைவர் கலாநிதி சி.ரகுராம் அவர்களும் துறைசார் அனைவரும் ஒத்துழைத்து வருகின்றனர்.
கிராமத்திற்கு பொதுவான நூலகம் அமைப்பது தொடர்பில் உத்தேசித்தபோது மூலதனம் பெரும் தடையாக இருந்தபோதும் பிரதேசசெயலாளர், கிராமசேவகர், கிராம அமைப்புக்கள், பாடசாலைச் சமூகம், பொதுமக்கள், தன்னார்வலர்கள், நலன் விரும்பிகள், புலம்பெயர் உறவுகள், நண்பர்கள் என அனைவரும் கட்டட உருவாக்கத்திலும் நூல்களை பெற்றுக்கொள்வதிலும் கட்டடத்திற்கான தளபாடங்களை வழங்குவதிலும் ஆதரவளித்திருந்தனர். இந்த நூலகமானது மிகக் குறுகிய காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டமை முயற்சியின் முதல் வெற்றிப்படியாகும். நூலகத்தின் ஆணிவேர் புத்தகங்களாகையால் முகப்புத்தகம் ஊடாகவும் கடிதங்களூடாகவும் கேட்டுக்கொண்டமைக்கு இணங்க யாழ்ப்பாண சிறகுகள் அமைப்பு, நல்லூர் லயன்ஸ் கழகம், மல்லாகம் புத்தகப்பண்பாட்டு பேரவை மற்றும் சமூக ஆர்வலர்கள், புலம்பெயர் உறவுகள் என பலர் சிறுவர் முதல் பெரியோர் வரை பயன்படுத்தக்கூடிய கிட்டத்தட்ட 800 நூல்களை வழங்கி இவ் முயற்சியை ஊக்குவித்ததோடு தற்போதும் பிறந்தநாள் போன்றன நினைவாக நூல்களை அன்பளிப்புச்செய்தும் வருகின்றனர்.
தற்போது நூலகம் பயன்பாட்டுக்கு வந்த ஓராண்டு காலத்தில் சிறுவர்கள், மாணவர்கள் தமக்கான நூல்களை வாசிக்கும் நிலையை காணமுடிகின்றது. இருப்பினும் மிகக் குறைந்தளவு மாணவர்கள் வருகையும் நூல்களை வாசிப்பதும் நாம் பின்னோக்கி இருக்கும் வாசிப்பின் நிலையையே காட்டுகின்றது. இந்த நூலக உருவாக்கம் தொடர்பில் நூலகத்தை பயன்படுத்தும் கிராம மக்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தபோது.
“பிள்ளைகள் வீட்டில் புத்தகம் வாசிப்பதைக் காண முடிவதில்லை. நூலகம் கட்டியதும் வாசிக்க வருவது மகிழ்ச்சியை தருவது” என கூறுகின்றனர். மேலும் கிராமசேவகர் இவ் நூலக உருவாக்கம் தொடர்பில் குறிப்பிடும்போது “இது போன்ற இளைய சமுதாயத்தினர் சமூகம் மீதான பொறுப்புச் சிந்தனைகள் அதிகரித்து சமூகம்சார் செயற்பாடுகளில் ஈடுபட முன்வருவது வரவேற்கத்தக்கது” என குறிப்பிட்டிருந்தார்.
நோய்த் தொற்றுக் காரணமாக பாடசாலை கல்வி நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்திருந்த காலப்பகுதியில் மாணவர்கள் இணையவழி கல்வி என்று திறன்பேசியிலேயே தமது அதிகளவு நேரத்தை செலவிட்ட சந்தர்ப்பத்தில் திறன்பேசியில் விளையாட்டு, முகப்புத்தகம் என்று திசை மாறும் இளம் சமுதாயத்தை வாசிப்பையும் கிரகித்தல் திறனையும் மறந்துவரும் நிலையை கண்முன்னே பாரத்திருக்கின்றோம். சமூகத்தில் இவ்வாறான நிலையை மாற்ற நூலக உருவாக்கங்களும் வாசிப்பு ஊக்குவிப்புமே சிறந்த வழியாக இருக்கும் என நம்புகின்றேன். பெற்றோர்கள், ஆசிரியர்கள் தினமும் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்கு என நேரம் ஒன்றை ஒதுக்கி பிள்ளைகளுக்கு வாசிக்க ஊக்கப்படுத்தலாம். ஒவ்வொரு வீடுகளிலும் சிறிய நூலகம் ஒன்றை அமைத்து சிறு போட்டிகளை வைத்து பரிசுப்பொருட்கள் வழங்கி சிறுவர்களுடன் பெரியர்களும் நூல்களை, பத்திரிகைகளை வாசித்து வாசிப்பை ஊக்குவிக்க முடியும். வெறுமனே சிறுவர்கள் வாசிப்பதை மறந்துவிட்டார்கள், வாசிப்பு நலிவடைந்து செல்கின்றது என்று பேசிக்கொண்டிருப்பதை விட இது போன்று இளைய சமூகம் நூலக உருவாக்கத்திலும் வாசிப்பை ஊக்குவிக்கவும் முன்வர வேண்டும். மாற்றம் என்பது எடுத்தவுடன் நிகழ்ந்துவிடாது ஆனால் முயற்சியை தொடரும் சந்தர்ப்பத்தில் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும் என்பதே எனது நம்பிக்கை. அடுத்த தலைமுறையினரின் திறமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாதை அமைத்துக் கொடுக்கவேண்டியது கல்விகற்ற சமூகத்தின் கடமையாகும்.



நா.சாருமதி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



# சிலாபம் களப்பினால் ஏற்படும் சுகாதார அச்சுறுத்தலுக்கு விரைவில் தீர்வு! : அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



சிலாபம் களப்பு மாசடைதல் தொடர்பான பிரச்சினையை உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்வதுடன் விசேட அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்து தீர்வைப் பெற்றுத் தருவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சிலாபத்திற்கான கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிலாபம் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிலாபம் களப்பினுள் அப்குதியிலுள்ள இறால் பண்ணைகளால் வெளியேற்றப்பப்படும் இரசாயனம் கலந்த கழிவுநீர் மற்றும் சிலாபம் நகர சபை, சிலாபம் பொது வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் கலப்பதன் காரணமாக களப்பு நீர் கடுமையாக மாசடைந்துள்ளதாக கடற்றொழிலாளர்கள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் அப்பகுதிக்கான கண்காணிப்பு விஜயமொன்றை சனிக்கிழமை (27) துறைசார் அதிகாரிகள் சகிதம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் நேரடியாக நிலமைகளை அவதானித்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில், சிலாபம் களப்பு மாசடைவதற்கு, இறால் பண்ணைகளால் வெளியேற்றப்படும் இரசாயனம் கலந்த கழிவு நீர் சுத்திகரிக்கப்படாமல் களப்பில் கலப்பதுவே காரணமாக இருப்பதை தான் அவதானித்ததாகவும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிலாபம் பொது வைத்தியசாலை மற்றும் நகர சபையினால் வெளியேற்றப்படும் குப்பை கூளங்கள் மற்றும் கழிவுப் பொருட்களும் களப்பு மாசடைதலுக்கு முக்கிய காரணம் எனவும் தெரிவிததார்.


அத்துடன், இப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக சிலாபம் பிரதேச சபைத் தலைவர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்படும் எனவும் அதில் கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, நாரா மற்றும் நெக்டா ஆகிய நிறுவனங்களின் உயரதிகாரிகள் இக் குழுவின் உறுப்பினர்களாக செயற்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

இதன்போது எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டபோது சிலாபம் பிரதேச கடற்றொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் அத்துடன் சிலாபம் கடற்றொழில் துறைமுக வானொலி தொடர்பாடல் கட்டமைப்பு சரியாக இயங்குவதில்லை போன்ற விடயங்கள் கடற்றொழிலாளர்களினால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

அதற்கு பதிலளித்த அமைச்சர், வானொலி தொடர்பாடல் கட்டமைப்பை புனரமைப்பதற்கு சிறிது கால அவகாசம் தேவையெனவும், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் தொடர்பான விபரங்களை வழங்குமாறும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்நாயக்க, மேலதிக செயலாளர் நாமல் தலங்கம, நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கமல் தென்னக்கோன், நெக்டா அமைப்பின் பணிப்பாளர் நாயகம் திருமதி அசோகா, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த உள்ளிட்ட உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# அச்சுவேலியில் வீதியோரம் புற்களை பிடுங்கிக்கொண்டிருந்தவர் மீது மோதிய வாகனம் : குடும்பஸ்தர் உயிரிழப்பு



வீட்டின் முன்னால், வீதியோரம் கிடந்த புற்களை பிடுங்கிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது கெப் ரக வாகனமொன்று மோதியதில், அந்த நபர் ஸ்தலத்திலேயே உயிரிழந்த சம்பவம் சனிக்கிழமை (27) அச்சுவேலியில் இடம் பெற்றுள்ளது. இந்த விபத்தில் மற்றொருவர் காயமடைந்துள்ளதோடு, வாகன சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

அச்சுவேலி, வல்லை, பருத்தித்துறை பிரதான வீதியில் நேற்று காலை வீட்டுக்கு முன்னாள் குடும்பஸ்தர் ஒருவர் புற்களை பிடுங்கிக்கொண்டிருந்துள்ளார். அப்போது வேக கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வந்த கெப் ரக வாகனம் அந்த நபர் மீது மோதி விபத்து ஏற்பட்டதில், சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார். அத்தோடு, அருகில் இருந்த மற்றொருவரும் விபத்தில் காயமடைந்துள்ளார். குறித்த வாகனம் நபரின் மீது மோதியதுடன், அங்கிருந்த இரண்டு மின்கம்பங்களையும் மோதி சேதப்படுத்தியுள்ளது. உயிரிழந்தவர் சீனியர் சந்திரகாந்தன் என்ற 56 வயதான நபர் என கூறப்படுகிறது.

இந்நிலையில், உயிரிழந்தவரின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இவ்விபத்துடன் தொடர்புடைய வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கோழிக்குஞ்சுகளை ஏற்றிச் சென்ற வாகனமே வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது எனவும், வாகனத்தை செலுத்திய நபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் தாதி உத்தியோகத்தர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொலிஸ்காவலின் கீழான ராஜகுமாரியின் மரணம் : பொலிஸ் அதிகாரிகளைக் கைதுசெய்யுங்கள்

## சட்டத்தரணிகள், மனித உரிமைகள் செயற்பட்டாளர்கள் வலியுறுத்தல்

பொலிஸ்காவலின்கீழ் நிகழும் மரணங்கள் தொடர்பில் மீண்டும் கவனம் குவிக்கப்படுவதற்குக் காரணமாகியுள்ள ராஜகுமாரியின் உயிரிழப்பு தொடர்பில் கடும் கண்டனம் வெளியிட்டிருக்கும் சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், இச்சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளைப் பணி இடைநிறுத்தம், பணி இடமாற்றம் செய்வதைவிடுத்து, அவர்களைக் கைதுசெய்து உச்சபட்ச தண்டனை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

பிரபல தொலைக்காட்சி நாடகத்தயாரிப்பாளரான சுதர்மா நெத்திகுமார என்பவரின் இல்லத்தில் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த 42 வயதான ராஜகுமாரி என்பவர் அண்மையில் பொலிஸ் காவலின்கீழ் உயிரிழந்த சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சுதர்மா நெத்திகுமாரவினால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாகக் கடந்த 11 ஆம் திகதி விசாரணைக்காக வெலிக்கடை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்ட ராஜகுமாரி, பொலிஸ்காவலின்கீழ் உயிரிழந்துள்ளார். அவர் கைதுசெய்யப்பட்டமைக்கான பதிவுகள் எவையும் பொலிஸ் பதிவேட்டில் காணப்படாத நிலையில், இச்சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதுடன் சிலர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறானதொரு பின்னணியில் இச்சம்பவம் தொடர்பில் ராஜகுமாரியின் கணவர் செல்வதுரை ஜேசுராஜ்க்கு ஆதரவாக செயற்பட்டுவரும் சட்டத்தரணியும் சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவருமான சேனக பெரேரா, “முதலாவதாக ராஜகுமாரியின் கைது சட்டவிரோதமான முறையிலேயே இடம்பெற்றுள்ளது.

அதேபோன்று பொதுமக்களைப் பாதுகாப்பதே பொலிஸாரின் கடமையாக உள்ள நிலையில், பொலிஸ்காவலின் கீழ் ஒருவர் உயிரிழப்பதென்பது சட்டத்துக்கு அப்பாற்பட்ட பிரச்சினையாகும்“ என்று கேசரியிடம் சுட்டிக்காட்டினார். மேலும் “ஒரு தமிழ் பணிப் பெண்ணை என்ன செய்தாலும், அதிலிருந்து இலகுவாகத் தப்பித்துக் கொள்ளமுடியும் என்று சிலர் கருதுகின்றார்கள். ஆனால் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்“ என்றும் அவர் குறிப்பிட்டார்.

“இலங்கையின் கடந்தகால வரலாற்றை எடுத்து நோக்கையில் பொலிஸ்காவலின் கீழான மரணங்கள் ஒன்றும் புதிதல்ல என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து பதிவாகிக்கொண்டேயிருக்கின்றன. இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்கவேண்டும் என்ற வலுவான தீர்மானம் மற்றும் அதனை முன்னிறுத்திய நடவடிக்கைகள் இன்மையும், பொலிஸ் திணைக்களமானது நீண்டகாலமாகக் கட்டமைப்பு ரீதியான வன்முறைகளுக்குப் பழக்கப்பட்டிருப்பதுமே பொலிஸ் காவலின் கீழான மரணங்கள் தொடர்வதற்கான பிரதான காரணமாகும்“ என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

மேலும் சந்தேகநபர்கள் பொலிஸாரால் தாக்கப்படல், சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படல் என்பவை ஒருபுறமிருக்க பொலிஸ் நிலையங்களில் பணிபுரியும் பெண் பொலிஸார் கூட வாய்மொழி மூலமாகவும், உடலியல் ரீதியாகவும் பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பொலிஸ்காவலின்கீழ் உயிரிழக்கும்போது அதனை இந்தச் சமூகம் வெகுசுலபமாக ஏற்றுக் கொள்வதாகவும், அதுகுறித்து எவ்வித எதிர்ப்பையோ அல்லது கரிசனையையோ வெளிக்காட்டுவதில்லை எனவும் குறிப்பிட்ட அம்பிகா சற்குணநாதன், எனவே குறித்தவொரு தரப்பினருக்கு எதிரான இத்தகைய குற்றங்களை நாம் உளவியல் ரீதியாக அனுமதிக்கும்போது நாளை அது நமக்கெதிராகத் திரும்பக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது என்றும் எச்சரித்தார்.

இந்நிலையில் ராஜகுமாரியின் மரணத்துடன் தொடர்புடைய அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளும் கைதுசெய்யப்படவேண்டும் என்று வலியுறுத்திய சட்டத்தரணி சேனக பெரேரா, இதுகறித்து ராஜகுமாரியின் கணவர் செல்வதுரை ஜேசுராஜின் சார்பில் வெகுவிரைவில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்ய விருப்பதாகவும் தெரிவித்தார்.

அதே விடயத்தை வலியுறுத்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், வெறுமனே பணி இடைநிறுத்தம் மற்றும் பணி இடமாற்றம் ஆகியவற்றுடன் நின்றுவிடாமல் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படுவதை உறுதி செய்யவேண்டும் என்றும், சட்டத்தின் ஆட்சி அனைவருக்கும் பொதுவானதும் சமத்துவமானதுமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.


அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



**We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.**

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| | | |
|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 |
| ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேனி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 |
| பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 | விஸ்வமடு 021 320 1515 |
| மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |









இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.